**National Seminar on Indian Capital Market in the Post Liberalization Era held on 7-8, March, 2004 at Bharathidasan University, Trichy**

**Organiser: Dr. M. SELVAM**

## Maalaimurasu, Trichy Edition, Dated: 06.03.2004, Page No.:05

நாளை தொடக்கம்:

### திருச்சி பாரதிதாசன் பல்கலை கழகத்தில் 2 நாள் கருத்தரங்கு

திருச்சி, மார்ச்.6-

திருச்சி பாரதிதாசன் பல்கலை கழகத்தில் 2 நாள் கருத்தரங்கு நாளை தொடங்கு கிறது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், வணிகவியல் துறையில் தாராளமயத்தின் பின் பகுதியில் இந்திய மூலதன சந்தை என்ற தலைப்பில் பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடன் 2 நாள் தேசிய கருத்தரங்கை நடத்துகிறது. இந்த கருத்தரங்கு நாளை மற்றும் நாளை மறுநாள் (ஞாயிறு) பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகிறது.

கருத்தரங்கில் 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு தங்களின் ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பிக்க உள்ளார்கள். 400-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு விவாதிக்க உள்ளனர்.

**ராஜகோபால்**

கருத்தரங்கின் முதல் நாள் அன்று தேர்வு நெறியாளர் ராஜகோபால் கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசுகிறார். தேசிய மூலதனசந்தை சென்னை கிளை மண்டல மேலாளர் சிவகுமார், கோவை மூலதன சந்தை பொது மேலாளர் கார்த்திக் கேயன் மற்றும் பல்வேறு பல் கலைக் கழக கல்லூரி பேரா சிரியர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

## Dinamalar, Trichy Edition, Dated: 10.03.2004, Page No.: 02

### பொது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெருக்க 'செபிக்கு' தேவையான அதிகாரம் அளிக்க வலியுறுத்தல்

திருச்சி, மார்ச் 10—

பங்கு சந்தைகளில் நடந்த ஊழல்களும் முறைகேடுகளும் பொது முதலீட்டாளர்களி டையே நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி உள்ளது. இதனை போக்க 'செபி'க்கு தேவை யான அதிகாரம் அளிப்பதோடு முதலீட்டை பெருக்க புதிய முயற்சிகளும் தேவை.என வணிகத்துறை பேராசிரியர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் துறை சார்பில் பல்கலைக்கழக மான்யக்குழு உதவியுடன் தாராளமயமாக் களின் பிற்காலத்தில்(பின்பகுதியில்) மூல தனச் சந்தை என்பது பற்றிய தேசிய கருத்த ரங்கு நடந்தது. கருத்தரங்கை பல்கலைக்க ழக தேர்வு நெறியாளர் டாக்டர் ராஜகோபால் தொடங்கி வைத்து பேசியதாவது:

இந்தியாவில் மூலதனச் சந்தையிலுள்ள பிரச்னைகள் இங்குள்ள கம்பெனிகளின் நல்ல சூழலை பாதிக்கும் வகையில் தொடர் புடையவை. மூலதனச் சந்தையில் ஏற்பட் டுள்ள மாற்றங்கள் பங்கு நிர்ணயத்தன்மை யையும் பாதித்துள்ளன என உதாரணங்க ளோடு சுட்டிக்காட்டிய அவர், வணிகத்தின் அளவில் ஏற்படுத்தியுள்ள பிரதிபலிப் பையும் விளக்கினார். மேலும் ஆன்லைன் வணிகம், வைப்புத்திட்டம் போன்றவை குறிப்பிடத்தக்க மேம்பாட்டு அம்சங்கள் என்றார்.

தொடர்ந்து கருத்தரங்கில் சமர்ப்பிக்கப் பட்ட 150க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டு ரைகள் மூலம் பெறப்பட்ட ஆலோசனைகள் பற்றிய விவரமாவது:

மூலதனச்சந்தை என்பது விரைவான வளர்ச்சிக்கான மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் என்பதால் இந்தியா அதற்கு விதிவிலக்கல்ல.

தாராளமயமாக்களின் காரணமாக முத லீட்டாளர்களின் வருகை அதிகரித்துள் ளதால் மூலதனச் சந்தை ஒரு முறையற்ற பாதையில் செல்கிறது. அதிகப்படியான சந்தை மூலதனமயமாக்களின் விளைவாக இந்திய மூலதன சந்தையில் நிரந்தரமற்ற தன்மையையும் இரு நாடுகளுக்கிடையே யான மூலதன உரிமை மற்றும் உலகளாவிய நிதி ஒருங்கிணைப்பு உருவாகியுள்ளது.

இந்திய முதலீட்டாளர்களின் முதலீடு முறையான அளவுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தாலும் வளர்ச்சியுற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் புதிய மூலதன சந்தையின் மூலம் செலுத்தப்பட்ட சேமிப்பு மிகவும் குறைந்துள்ளது போல் உள்ளது.

புதிய பங்குகள் மீதான வருவாய் குறைந் தாலும் சில நிறுவனங்களில் நடந்த ஊழல்கள், அதனால் ஏற்பட்ட நம்பிக்கை யின்மை முதன்மை சந்தையில் நிதி ஆதாரங் களைக் கொண்டு வருவதில் ஒரு பின்ன டைவை ஏற்படுத்தியுள்ளது. எனவே புதிய பங்கு சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட புதிய சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மூலதனச்சந்தையின் செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் பரஸ்பர நிதி, பொது முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்பை பலவ கைகளிலும் நிறைவேற்ற தவறியுள்ளது. யுடிஐ நிறுவனம் உண்மையில் தனது அணுகு முறை மற்றும் சரியான நிர்வாகமின் மையால் பரஸ்பர நிதி மீது நம்பிக்கை இழக்க நேரிட்டுள்ளது. எனவே மூலதன நடவடிக் கைகளில் 'செபி'யின் விதிமுறைகளை கட்டாயமாக கடைபிடிக்கப்படுவதோடு யுடிஐ யின் நிர்வாகம் வெளிப்படையானதா கவும் முதலீட்டர்களுக்கு சாதகமானதா கவும் இருக்க வேண்டும்.

சந்தை முதலீடு மற்றும் ஆண்டு வர்த்தகம் மற்றும் பங்குதாரர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே மூலதனச்சந்தையில் நிலையாக உள்ளன. சமீபகாலமாக இந்திய மூலதன சந்தையில் ஏற்பட்டுள்ள ஊழல் மற்றும் முறைகேடுகள் முதலீட்டாளர்களின் நம்பிக் கையை குறைத்துவருகிறது. எனவே செபிக்கு தேவையான அதிகாரங்கள் அளித்து நடவ டிக்கை மூலம் தேவையான மாற்றங்கள் கொண்டு வந்தால் மூலதன சந்தையை சரி செய்ய இயலும் என்பது போன்ற ஆலோச னைகள் வழங்கப்பட்டன. கருத்தரங்கில் தேசிய பங்குச்சந்தை மேலாளர் சிவக்குமார், கோவை பங்குசந்தை பொதுமேலாளர் கார்த்திகேயன், ஏ.ஆர்.சி.பத்திரங்கள் நிறுவ னத்தின் இயக்குனர் வெள்ளையன், ஜோஸப் கல்லூரி வணிகவியல் துறை தலைவர் டாக்டர் லூயிஸ் அந்துவான், ரீக்கிங் கன்சல் டனிங் சர்வீசஸ் இயக்குனர் குணபாலன் ஜமால் முகமது கல்லூரி முதல்வர் ஷேக் முகம்மது உட்பட பலர் பேசினர்.

கருத்தரங்கு ஏற்பாடுகளை பல்கலைக்க ழக வணிகவியல் துறை பேராசிரிய செல்வம் உட்பட பலர் செய்திருந்தனர்.